*கவனிக்க.-2023.02.10 ஆந் திகதிய 2319 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2320 - 2023 පෙබරවාරි මස 17 වැනි සිකුරාදා - 2023.02.17

*2320 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 56 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, மாச்சு மாதம் 10ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, பெப்புருவரி மாதம் 24ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

55- B 082429 - 353 (2023/02)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68896.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NWP/ PLC/ L9/ NK/ LTL/30 .

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டத்தில் நிகவெரடிய செயலகப் பிரிவின் இலக்கம் 329 திவுல்லேகொட கிராம அலுவலர் பிரிவின் திவுல்லேகொட கிராமத்தில் அமைந்துள்ள அ.க.வி. 2946 இன் துண்டு இலக்கம் 101 இன் ஒரு பகுதி தொடர்பாக குடியிருப்பு அதிகாரியின் மூலம் வரையப்பட்ட வரைவு இலக்கம் 2019/03 -iii இல் காட்டப்படும் அளவின் ஐந்து (05) ஏக்கர் அரச காணிப்பகுதியை விவசாய நடவடிக்கை ஒன்றுக்காக திரு. ஹேரத் முதியன்சேலாகே விமலசேன அவர்களினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

02. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரசுக்குச் சொந்தமான நீதிபதி ஓடை;
கிழக்கு : (அரச காணிகளுக்கு ) உட்செல்லும் வழி;
தெற்கு : அரச காணி (அ.க.பி. 2946 இன் துண்டு இல.101 இன் ஒரு பகுதி);
மேற்கு : அரச காணி (அ.க.பி. 2946 இன் துண்டு இல.101 இன் ஒரு பகுதி).

03. கோரப்பட்ட காணியை தேவையான விடயத்திற்கு குத்தகைக்குக் கொடுக்க முடியும். எனவே அரசினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப காணியை குத்தகைக்குக் கொடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது வருடங்கள் (30) (2022.06.30ஆந் திகதியிலிருந்து முப்பது வருடங்களுக்கு முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- கௌரவ அமைச்சர் அனுமதித்த வருடத்திற்கான பெறுமதியின் விலை மதிப்பு ஐந்து மில்லியனை (ரூ.5,000.000) விட குறைந்த சந்தர்ப்பத்தில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பின் மீது அவ்வருடத்தின் காணியின் முன்னேற்றம் அற்ற பெறுமதியின் 2% ஆகும். கௌரவ அமைச்சர் அனுமதித்த வருடத்திற்கான பெறுமதியின் விலை மதிப்பு ஐந்து மில்லியனை விட (ரூ.5,000,000) அதிகமாகும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளர்கள் மதிப்பீட்டின் மீது அவ்வருடத்தின் காணியின் முன்னேற்றம் அற்ற பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஒவ்வொரு வருடங்களிலும் மாற்றப்பட வேண்டியதுடன் அது முன் 5 வருடங்களின் இறுதியில் அறவிட்ட வருடாந்தக் குத்தகைத் தொகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) இந்தக் காணியை விவசாய நடவடிக்கையான ( முள் அனோதா) திட்டத்தைத் தவிர ஏனைய நடவடிக்கை ஒன்றுக்கும் பாவிக்கக் கூடாது;

(இ) இந்தக் குத்தகை துவங்கி ஒரு வருடத்தினுள் மாகாணக் காணி ஆணையாளர், பிரதேச செயலாளாரின் உள்ளம் கவரும் முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.;

(ஈ) இந்தக் குத்தகையானது மாகாண காணி ஆணையாளர், பிரதேச செயலாளர் அத்துடன் ஏனைய நிறுவனங் களினால் விதிக்கப்பட்டுள்ள விசேட நிபந்தனை களுக்கும் கீழ்ப்படிவது அவசியமாகும்;

(உ) குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட காணியானது குத்தகைக்குப் பெற்றவரினால் காணியைப் பெற்றதன் நோக்கத்தை குறித்த காலத்தினுள் அடைய தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு செயற்படும்;

(ஊ) 2022.06.30 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் வரை இந்தக் காணியை உப குத்தகைக்கோ அல்லது மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அதன் பண்புகூட உப குத்தகைக்கோ வேறொருவருக்கு மாற்றுவதற்கோ இந்தக் காணியை குத்தகைக்கு வழங்கிய காரணத்திற்கு மட்டமே முடியும்;

(எ) குத்தகைப் பணத்தைத் தொடர்ந்து செலுத்த வேண்டியதுடன் குத்தகை அவ்வாறு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே செயலிழந்து விடும். குத்தகைப் பணத்தை தொடர்ந்து செலுத்தாத விடத்து செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகைக்கு 10% தண்ட வட்டிப்பணம் அறவிடப்படும்.

04. வர்த்தமானி அறிவித்தலின் பின் ஆறு வாரங்களுக்கு குறிப்பிட்ட காணியை குத்தகைக்கு விடாது இருப்பதை ஏற்று காரணங்களை எழுத்து மூலம் குறிப்பிட்டு எனக்கு சமர்ப்பிக்கப்படா விடின் கேள்விக்கேற்ப குத்தகைக்கு விடப்படும்.

W.R.A.T. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.26.

02- 233

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/67932.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

களுத்துறை மாவட்டம், பாலிந்தநுவர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 841 ஏ, இங்குருதளுவ கிராம அலுவலர் பிரிவின் ஹெடிகல்ல என்னும் கிராமத்தின் காணி உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட 841A/05 ஆம் இலக்கமுடைய நில வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் A இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 01 ஏக்கர், 03 றூட், 25 பேர்ச், அளவுடைய அரச காணியினை விவசாய நடிவடிக்கைகளின் பொருட்டு திரு. தேசாந்த லொக்குசூரிய என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : மத்திய தர வகுப்புக் காணி மற்றும் பாதை;
கிழக்கு : குமார மற்றும் பீடன் ஆகியோரின் காணி மற்றும் பாதை;
தெற்கு : இந்திரபால ஆகியோரின் காணி மற்றும் பாதை;
மேற்கு : மத்திய தர வகுப்புக் காணி மற்றும் இந்திரபால ஆகியோரின் காணி.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது வருடங்கள் (30) (2022.10.07ஆந் திகதி முதல் 2052.10.06 வரை ) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.-** கௌரவ அமைச்சர் குத்தகையை அனுமதித்த ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப்பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்: அறவிடப்படமாட்டாது.*

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.10.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம்.எச்.ஏ.டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.02.08.

02- 266

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/70062.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : E slims No. App/ 1/ 13/12/1041 .

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

களுத்துறை மாவட்டம், புளத்சிங்கள பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 821 ஏ, தெல்மல்ல கிராம அலுவலர் பிரிவின் தெல்மல்ல என்னும் கிராமத்தின் எப்.வீ.பீ. இலக்கம் 03 இன் மூலம் காட்டப்படுகின்ற வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 2077 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 0.177 ஹெக்டயார் அளவுடைய அரச காணியினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு வரையறுக்கப்பட்ட தெல்மேல்ல இளம் விவசாயிகள் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 2067;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 2067 மற்றும் 2112;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 2121 மற்றும் 2078;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 2078 மற்றும் 2067.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2022.11.16 ஆந் திகதி முதல் 2052.11.15 வரை ) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட் டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கௌரவ அமைச்சர் குத்தகை அனுமதி வழங்கிய 2022 ஆம் வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தைகளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குத்தகை ஆரம்பமாகும் 2022.11.16 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம்.எச்.ஏ.டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.02.08.

02- 267

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/70261.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

களுத்துறை மாவட்டம், பாலிந்தநுவர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 835 பீ, லத்பந்துர கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் லத்பந்துர என்னும் கிராமத்தின் எப்.வீ.பீ.131 ஆம் இலக்க நில வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 903 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 01 ஏக்கர், 0 றூட், 04 பேர்ச், அளவுடைய அரச காணியினை விவசாய நடிவடிக்கைகளின் பொருட்டு திரு. பொல்கஹகே தொன் ஆரியரத்ன என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 902;
கிழக்கு : பாதை( காணித்துண்டு இலக்கம் 911);
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 904;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 905 மற்றும் 901.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2022.10.07ஆந் திகதி முதல் 2052.10.06 வரை ) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- கௌரவ அமைச்சர் குத்தகையை அனுமதித்த ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் மாறுபடாத பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் மாறுபடாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்: அறவிடப்படமாட்டாது.*

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.10.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம்.எச்.ஏ.டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.02.08.

02- 268